# 16 முப்பொருள்

சைவ சித்தாந்தம் என்றும் உள்ள பொருள்களாக பதி, பசு, பாசம் என்ற மூன்றையும் குறிப்பிடுகின்றது. அவை தொடக்கமோ முடிவோ அற்றவை; என்றும் உள்ளவை அநாதி ஆனவை.

## பதி

பதி, கடவுள், இறைவன் என்பன ஒரு பொருட் சொற்கள். பதி பரிபூரணமானவர். அவர் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; நிரம்பிய கருணையாளர். அவருக்குத் தளைகளே இல்லை. உலகம், உயிர்கள் ஆகியவற்றையெல்லாம் கடந்து உள் நிற்பதால் பதியைக் கடவுள் என்றும் உலகினை ஆட்சி புரிவதனால் ஆண்டவன் என்றும் அழைப்பர். பதி உயிர்கள் தோறும் ஒன்றாய் உடனாய் வேறாய் உள்ளார். எல்லா உயிர்களிலும் அவர் உறைந்துள்ளார். ஆதலால், நாம் எல்லா உயிர்களுக்கும் நல்லவற்றைச் செய்ய வேண்டும்.

## பசு

உயிர்கள் எண்ணற்றவை. தாம் செய்த செயல்களின் பலனை அனுபவிப்பவை. அவை பாசத்தினால் கட்டுண்டவை. உயிர்கள் தமது தன்மையை உணர்வதில்லை. அவை தமது தன்மையை அறிந்து, பதியை அடைதலே முத்தியாகும். நாம் கடவுளுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல் வேண்டும். அது உயிர்களுக்கு பிறப்பு இறப்பை இல்லாமற் செய்து, முத்திக்கு வழியேற்படுத்தும்.

## பாசம்

பாசம் உயிர்களைப் பற்றி நிற்கும். பாசம் என்பது, பந்தித்து நிற்பது எனப் பொருள் படும். இது உயிர்களின் அறிவை மயக்கி, துன்பத்தை இன்பமாகக் காட்டி, அவற்றை அனுபவிக்கச் செய்து, பிறவிகளை வழங்குகின்றது. உயிர்கள் கடவுளை அறியாதபடி பாசம் தடை செய்கின்றது.

பிறர் அறிவிக்காமலே தானே அறியும் முற்றறிவுள்ள பொருள் பதி. அறிவித்தால் அறிந்தும், அறிவிக்காவிட்டால் அறியாமலும் உள்ள சிற்றறிவுள்ள பொருள் பசு. அறிவித்தாலும் அறியமுடியாத பொருள் பாசம். இவ்விதமாக பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் அறிவின் அடிப்படையில் முற்றறிவு உள்ள பொருள், சிற்றறிவு உள்ள பொருள், அறிவற்ற பொருள் என மூன்றாக வகுக்கலாம்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.ஷ**

1. முப்பொருள்களும் யாவை?
2. மும்மலங்களும் எவை?
3. பதி வேறு எவ்வாறு அழைக்கப்படுவார்?
4. பதியின் சிறப்பியல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

### பாடச்சுருக்கம்

- சைவ சமயம் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களையும் உள்ள பொருள் என்று கூறுகின்றது.
- ஆணவம், கன்மம், மாயை என்பன மூவகை மலங்களாகும்.
- பதி பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டது.

## செயற்பாடு

**02. ‘‘முப்பொருள்’’ என்ற தலைப்பில் வகுப்பறையில் 3 நிமிடம் உரை நிகழ்த்துக.**